## அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில், பழனி, திண்டுக்கல் மாவட்டம்.

### பொது ஏலம் / ஒப்பந்தபுள்ளி அறிவிப்பு

ந.க.எண். 446/2018/சி2 நாள்.17.05.18

திண்டுக்கல் மாவட்டம், பழனி, அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயிலின் மலைக்கோயிலில் பசலி 1428க்கு 01.07.2018 முதல் 30.06.2019முடிய உள்ள காலத்திற்கு மட்டும் பிரசாதம் தயார் செய்து விற்பனை செய்யும் உரிமத்திற்கு 22.06.2018.ம் தேதியன்று பொது ஏலம்/ஒப்பந்தபுள்ளி நடைபெற உள்ளது.

பிரசாதம் தயார் செய்து விற்பனை செய்யும் உரிமத்தினை பொது ஏலம்/ ஒப்பந்தப்புள்ளி மூலம் உயர்ந்தபட்ச கேள்விதாரருக்கு வழங்கிட ஆணையர் உரிமத்தினை அங்கீகரித்த பின்னர் 01.07.2018 முதல் 30.06.2019 முடிய உள்ள காலத்திற்கு மட்டும் உரிமம் அனுபவித்துக் கொள்ள கீழ்காணும் நிபந்தனைகளுக்கு உட்பட்டு பொது ஏலம்/ஒப்பந்தபுள்ளி நடத்தப்படும்.

| | | | |
|---|---|---|---|
| 1 | ஒப்பந்தப்புள்ளி படிவம் விலை. | : | ரூ.5000/- |
| 2 | பொது ஏலம்/ஒப்பந்தப்புள்ளி நடைபெறும் இடம். | : | இணை ஆணையர்/நிர்வாக அதிகாரி அலுவலகம், அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில், அடிவாரம் பழனி. |
| 3 | ஒப்பந்தபுள்ளி படிவம் வழங்கப்படும் நாட்கள் | : | 01.06.2018 முதல் 21.06.2018 முடிய |
| 4 | பூர்த்தி செய்யப்பட்ட ஒப்பந்தப்புள்ளி படிவம் சமர்ப்பிக்க கடைசி நாள் | : | 22.06.2018 நண்பகல் 12.00மணிக்குள் |
| 5 | பொது ஏலம் நடைபெறும் நாள் | : | 22.06.2018 பிற்பகல் 12.30மணி |
| 6 | ஒப்பந்தபுள்ளி திறக்கப்படும் நாள். | : | 22.06.2018ம் தேதி பொதுஏலத்திற்கு பிறகு. |
| 7 | பொது ஏலம்/டெண்டர் டெபாசிட் தொகை. | : | ரூ. 2,00,00,000/- |
| 8 | வங்கி சால்வன்சி. | : | ரூ. 3,00,00,000/- |
| 9 | உரிம கால காப்புத் தொகை. | : | ரூ. 10,00,000/- |

10. திருக்கோயிலில் பிரசாதம் தயார் செய்து விற்பனை செய்யும் உரிமத்தில் 5 ஆண்டுகாலம் அனுபவம் உள்ளதென சான்று வழங்கப்படல் வேண்டும்.
11. திருக்கோயில் பிரசாத விற்பனையில் தொகை ரூ.1,00,00,000/- க்கு மேல் ஒரு ஆண்டிற்கு விற்பனை செய்து இருக்க வேண்டும் அதற்குரிய சான்று மூன்று வருட காலத்திற்கு தர வேண்டும்.

மேற்கண்ட நிபந்தனைகளை பூர்த்தி செய்பவர்கள் மட்டும் பொது ஏலம்/ டெண்டரில் கலந்து கொள்ள அனுமதிக்கப்படுவார்கள். ஒப்பந்தப்புள்ளிக்கான வைப்புத் தொகையை **"இணை ஆணையர்/செயல் அலுவலர்"** என்ற பதவி பெயரில் தேசியமயமாக்கப்பட்ட வங்கி வரைவோலையாக எடுத்து ஒப்பந்தப்புள்ளி படிவத்துடன் இணைத்து கொடுக்க வேண்டும். இதர நிபந்தனைகளை இத்திருக்கோயில் அலுவலகத்தில் வேலை நாட்களில் வேலை நேரங்களில் நேரில் கேட்டு தெரிந்து கொள்ளலாம்.

**இணை ஆணையர்/செயல் அலுவலர்.**

## அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில், பழனி

*பிரசாதம் தயார் செய்து விற்பனை செய்யும் உரிமத்திற்கான சிறப்பு நிபந்தனைகள்*

*உரிம காலம் .-* பசலி 1428ல் 01.07.2018 முதல் 30.06.2019 முடியவுள்ள காலம் மட்டும்.

1. திருக்கோயில்களில் பிரசாதம் தயார்செய்து விற்பனை செய்யும் அனுபவம் குறைந்தது ஐந்து வருடங்களாவது பெற்று இருக்கவேண்டும். அதற்குரிய சான்று இணைக்கப்பட வேண்டும்.

2. பிரசாதங்கள் தயார் செய்து விற்பனை செய்யும் உரிமத்திற்கான பொது ஏலம்/ டெண்டரில்ஏ கலந்து கொள்பவர்கள், ரூ.2,00,00,000/— (ரூபாய் இரண்டு கோடி மட்டும்) டெபாசிட் தொகையினை தேசிய மயமாக்கப்பட்ட வங்கியில் " **இணை ஆணையர்/செயல் அலுவலர், அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில், பழநி** " என்ற பெயரில் மாற்றத்தக்க அளவிற்கு வங்கி வரைவோலை அல்லது பே ஆர்டர் - ஆகப் பெற்று செலுத்தி பொது ஏலம்/டெண்டரில் கலந்துக்கொள்ளவேண்டும்.

3. உரிமகால காப்புத் தொகை ரூ.10,00,000/- (ரூபாய் பத்து லட்சம்) இணைஆணையர்/செயல் அலுவலர், அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில், பழநி என்ற பெயரில் தேசியமயமாக்கப்பட்ட வங்கி வரைவோலையாக ஒப்பந்தப்புள்ளியுடன் இணைக்க வேண்டும். இணைக்கப்படாத ஒப்பந்தப்புள்ளி பரிசீலனைக்கு ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. அங்கீகரிக்கப்பட்ட உரிமதாரரது உரிமகால காப்புத்தொகை சம்மந்தப்பட்ட பசலி தணிக்கை முடிவுற்று தணிக்கை அறிக்கையில் ஆட்சேபனை இல்லை என்பது உறுதி செய்த பின்னரே வட்டியின்றி வழங்கப்படும். ஆட்சேபனை இருப்பின் தொகை பிடித்தம் செய்து கொண்டு மீதி தொகை வழங்கப்படும்.

4. பொது ஏலம் /டெண்டர் தொடங்கும் பொழுது, பொது ஏலத்தில் கலந்து கொள்ள விரும்புபவர்கள் உரிமத்திற்கான டெபாசிட்தொகையை அசல் வங்கி வரைவோலை மூலம் செலுத்தி தங்களது பெயரை பதிவு செய்து கொள்ள வேண்டும்.

5. பிரசாதம் தயார்செய்து விற்பனை செய்யும் உரிமத்திற்கான பொது ஏலம் டெண்டரில் கலந்து கொள்ள விருப்புபவர்கள் ரூ.3,00,00,000/-த்திற்கு (ரூபாய் மூன்று கோடி மட்டும்) வட்டாட்சியரிடமிருந்து 01.04.2018ம் தேதிக்கு பிறகு பெறப்பட்ட அசல் சால்வன்சி சான்றிதழ் அல்லது 01.04.2018 க்கு பின்பு பெறப்பட்ட தேசியமயமாக்கப்பட்ட வங்கி காப்புறுதி (Bank Guarantee) பெற்று ஒப்புந்தப்புள்ளியுடன் இணைக்க வேண்டும். இணைக்கப்படாத ஒப்பந்தப்புள்ளி பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட மாட்டாது.

6. பிரசாத விற்பனையில் வருடம் ஒன்றுக்கு ரூ.1,00,00,000/- (ரூபாய் ஒரு கோடி) க்கு மேல் விற்பனை செய்ததற்கான சான்று சம்பந்தப்பட்ட திருக்கோயில் நிர்வாக அதிகாரியிடமிருந்து பெற்று மூன்று ஆண்டு காலத்திற்கு இணைக்கப்பட வேண்டும்.

7. திருக்கோயிலுக்கு பாக்கி வைத்திருப்பவர்கள், டிகிரி செய்யப்பட்டவர்கள், திருக்கோயில் நலனுக்கு எதிராக செயல்பட்டவர்கள், வழக்கு தொடர்ந்தவர்கள், குற்றவியல் நீதிமன்றத்தில் நன்னடத்தை காரணமாக தண்டனை அடைந்தவர்கள் பொது ஏலம் / டெண்டரில் கலந்து கொள்ள அனுமதிக்கப்படமாட்டார்கள். வருமான வரி, விற்பனை வரி, சேவை வரி ஆகிய சம்பந்தப்பட்ட வரிகள் பிரசாத விற்பனையில் கடந்த மூன்று ஆண்டுகளில் சம்பந்தப்பட்ட அரசு துறைக்கு அரசு கணக்கில் செலுத்தியதற்கு சார்ட்டு அக்கவுண்டன்ட் சான்றிட்ட சான்று பொது ஏலம்/டெண்டர் தினத்தன்று அலுவலகத்தில் கொடுக்க வேண்டும்.

8. பொது ஏலம் / டெண்டரில் கலந்து கொள்ள விருப்பமுள்ளவர்கள் தனது சான்றொப்பமிட்ட PAN CARD நகல் மற்றும் அசல் பொது ஏலம்/டெண்டர் தினத்தன்று கொடுக்க வேண்டும்.

9. பொது ஏலம் / டெண்டரின் பொழுது சிறப்பு நிபந்தனைகளில் வரிசை எண்,1 முதல் 8 முடிய உள்ள ஆவணங்கள் பெற்றுள்ள நபர்கள் மட்டுமே பொதுஏலம் / டெண்டரில் கலந்து கொள்ள அனுமதிக்கப்படுவார்கள். இதர நபர்கள் ஏலம் / டெண்டர் நடைபெறும் இடத்தில் அனுமதிக்கப்பட மாட்டார்கள்.

10. பொது ஏலம் / டெண்டர் அதிகாரம் பெற்ற முகவர்கள் (Power of Attorney) அல்லது நோட்டரி பப்ளிக்கிடமிருந்து உரிய ஆவணங்கள் தாக்கல் செய்து ஏலம்/ டெண்டரில் கலந்து கொள்ளலாம்.

11. பிரசாதம் தயார் செய்வதற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள வின்ஞ் நிலையம் எதிர்புறம், சின்னகுமாரர் விடுதி வளாகத்தில் உள்ள மண்டபத்தை பயன்படுத்திக் கொள்ள வேண்டும். விற்பனைக்கு மட்டுமே மலைக்கோயிலில் உள்ள பிரசாத விற்பனை நிலையங்களை பயன்படுத்த வேண்டும்.

12. திருக்கோயிலில் இருந்து ஒதுக்கீடு செய்யப்படும் இடத்தில் மட்டுமே பிரசாதத்தை தயார் செய்து விற்பனை செய்ய வேண்டும். விசேசகாலங்களில் மேற்கண்ட இடம் மாறுதலுக்கு உட்பட்டது. விசேஷ காலத்திற்கு கூடுதலாக விற்பனை நிலையம் அமைப்பதற்கு திருக்கோயில் அனுமதி பெற வேண்டும் அதற்கு தனியே திருக்கோயில் நிர்ணயிக்கும் வாடகைத் தொகையினை செலுத்த வேண்டும். இடத்தின் விஸ்தீரணத்தை நிர்வாக நலன் கருதி கூட்டவோ, குறைக்கவோ இணை ஆணையர்/செயல் அலுவலருக்கு முழு அதிகாரம் உண்டு.

13. பிரசாதங்கள் நல்ல அனுபவமுள்ள ஆட்களைக் கொண்டும் தரமான மூலப்பொருட்களை கொண்டும் சுகாதரமான முறையில் தயார் செய்து விற்பனை செய்ய வேண்டும்.

14. பிரசாதங்களை பிளாஸ்டிக் பாக்கெட்டுகளில் நிரப்பி விற்பனை செய்து தவிர்க்கப்படவேண்டும். அதற்கு பதிலாக Food Grade பொருட்களை பயன்படுத்தப்பட வேண்டும். பிரசாதம் விற்பனை மற்றும் தயார் செய்யுமிடத்தைச் சுத்தமாகவும், சுகாதாரமாகவும் வைத்துக்கொள்ள வேண்டும்.

15. கெட்டுபோன பிரசாதங்கள் மற்றும் நாள்பட்ட பிரசாதங்கள் விற்பனை செய்யக்கூடாது.

16. பிரசாதங்கள் எடை மற்றும் விலைப்பட்டியல் விபரம் சேவார்த்திகள் பார்வையில் தெரியும் வகையில் விற்பனை நிலையம் முன் வைக்கப்பட வேண்டும்.

17. பிரசாதங்களின் தரம், எடை மற்றும் தயாரிப்பு இடம் விற்பனை இடம் ஆகியவற்றையும், சுத்தம் சுகாதாரம் ஆகியவற்றையும் கண்காணிக்க இணை ஆணையர்/செயல் அலுவலருக்கு முழு அதிகாரம் உண்டு.

18. பிரசாதங்கள் விற்பனை செய்வதால் திருக்கோயில் இடத்தில் ஏற்படும் குப்பைகளை உரிமதாரர் அவர்களது சொந்த பொறுப்பில் சுத்தம் செய்ய வேண்டும். விற்பனை நிலையங்கள் முன் குப்பை தொட்டிகளை வைக்க வேண்டும்.

19. அன்றாடம் தயாரிக்கப்படும் பிரசாதங்களை சுவாமிக்கு நெய்வேத்தியம் செய்ய ஒவ்வொரு இனத்திலும் தினசரி ஒரு எண்ணிக்கை திருக்கோயிலுக்கு இலவசமாக வழங்கப்பட வேண்டும்.

20. பிரசாதம் தயார் செய்யப்படும் இடம் மற்றும் விற்பனை செய்யும் இடங்களுக்கு நியாய வாடகை நிர்ணயக்குழுவால் நிர்ணயம் செய்யப்பட்டுள்ள நியாய வாடகை தொகை உரிம அனுமதி வழங்கும் நாள்முதல் 30.6.2019 முடிய உள்ள காலத்திற்கு வாடகைத் தொகை முழுவதையும் வாடகை டெபாசிட்டாக உரிம அனுமதி வழங்கப்படும் நாளில் செலுத்த வேண்டும். வாடகை டெபாசிட் செலுத்திய பின்புதான் உரிம அனுமதி வழங்கப்படும்

<u>நியாய வாடகை விவரம்</u>

| வ.எ | இடம் | மாதம் 1க்கு வாடகை |
|---|---|---|
| 1 | மலைக்கோயில் தெற்கு வெளிப்பிரகாரம் பிரசாத விற்பனை நிலையம் | ரூ.39450/- |
| 2 | மலைக்கோயில் வடக்கு வெளிபிரகாரம் பிரசாத விற்பனை நிலையம் | ரூ.33600/- |
| 3 | வின்ஞ் நிலையம் எதிரில் சின்னகுமாரர் விடுதி அறை | திருக்கோயில் நிர்ணயம் செய்யும் வாடகை |
| 4 | மங்கம்மாள் மண்டபம் பிரசாத விற்பனை நிலையம் | ரூ.14550/- |

21. பிரசாதம் தயார் செய்யும் இடம் மற்றும் விற்பனை செய்யும் இடத்திற்கும் மின்கட்டணத்தை திருக்கோயிலில் அவ்வப்போது எழுப்பப்படும் கேட்பிற்கேற்ப பிரதிமாதம் 5ம் தேதிக்குள் செலுத்த வேண்டும்.

22. மேற்காணும் உரிமத்திற்கான உரிமக்காலம் **01.07.2018** முதல் **30.06.2019** முடிய **ஆகும்**. உரிமகாலம் முடிவுற்றதும் இதன் முழு உரிமைகளும் எவ்வித முன்னறிவிப்புமின்றி தன்னிச்சையாக திருக்கோயிலை வந்து சேரும். உரிமக்காலம் முடிந்தவுடன் உரிமம் குறித்து எவ்வித உரிமையும் பின்தொடர்ச்சியும் ஏலம் எடுத்த நபருக்கு கிடையாது. உரிமதாரர் மேற்குறிப்பிட்ட இடங்களை திரும்ப ஒப்படைக்கும் போது இத்திருக்கோயிலிருந்து எவ்வாறு ஒப்படைக்கப்பட்டுள்ளதோ அதன்படி நல்ல நிலையில் ஒப்படைக்க வேண்டும் சேதாரம் ஏதும் ஏற்பட்டிருப்பின் அதனை உரிமதாரரிடமிருந்து வசூலிக்கப்படும்.

23. மேற்காணும் நிபந்தனைகளில் எதையேனும் மீறி செயல்பட்டால் முன்னறிவிப்பின்றியும், காரணம் காட்டாதும் உரிமத்தை உடனடியாக ரத்து செய்து, மறு ஏலம்/டெண்டர் விடவும் உரிமத்தொகையினை பறிமுதல் செய்யவும், சட்டப்படி நடவடிக்கை மேற்கொள்ளவும் இணை ஆணையர் / செயல் அலுவலருக்கு முழு அதிகாரம் உண்டு.

24. பொதுஏலம்/டெண்டருக்கு டெபாசிட் செலுத்தும் நபர்கள் உரிமத்திற்கான நிபந்தனைகள் அனைத்தையும் முழுமையாக படித்து விபரம் அறிந்து கொண்ட பின்னரே டெபாசிட் செலுத்தி ஏலம்/டெண்டரில் கலந்து கொண்டதாகவே கருதப்படுவார்கள்.

25. பொது ஏலம்/டெண்டர் இந்துசமய அறநிலையத்துறை ஆணையரின் அங்கீகாரத்திற்கும் ரத்து அங்கீகாரத்திற்கும் உட்பட்டதாகும்.

26. இதர நிபந்தனைகள் ஏதும் இருப்பின் பொதுஏலம்/டெண்டரின் பொழுது அறிவிக்கப்படும். விருப்பமுள்ள தகுதி வாய்ந்த நபர்கள் மேற்காணும் நிபந்தனைகளுக்குட்பட்டு டெபாசிட் தொகை செலுத்தி மேற்படி உரிமத்திற்கான பொது ஏலம் / டெண்டரில் நேரில் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். மேலும் இதர விபரங்களுக்கு திருக்கோயில் அலுவலகத்திதை பணி நேரத்தில் அனுகுமாறும் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

27. பிரசாதங்கள் தயார் செய்து விற்பனை செய்யும் உரிமத்திற்கு பொதுஏலம் / டெண்டர் மூலம் உரிமம் உறுதி செய்யப்படும்.

28. பொது ஏலம்/டெண்டரில் இந்து மதத்தை சேர்ந்தவர்கள் மட்டுமே அனுமதிக்கப்படுவார்கள்.

29. டெபாசிட் செலுத்தி ஏலத்தில் கலந்து கொண்டு, ஏலக்கேள்வி கேட்பவர்களின் ஒவ்வொரு ஏலக்கேள்வி தொகையையும், உடனுக்குடன் ஏல பதிவேட்டில் பதிவு செய்வதுடன் அனைவரும் அறிந்து கொள்ளும் வகையில் வாசிக்கப்படும்.

30. பொது ஏலம்/டெண்டரில் உயர்ந்த தொகைக்கு கேள்வி கேட்ட நபர் உரிமத்தொகை முழுவதையும் ரொக்கமாகவோ, வரைவோலை மூலமாகவோ ஏலம் நடைபெறும் இடத்திலேயே அன்றே உடனடியாக செலுத்த வேண்டும்.

31. பொது ஏலம்/டெண்டர் முடிவடைந்தவுடன் உரிமத் தொகை முழுவதையும் உடனே செலுத்தத் தவறினால் எவ்வித முன்னறிவிப்புமின்று ஏலம் ரத்து செய்யப்பட்டு மறு பொது ஏலம் விடப்படும். மறு பொது ஏலத்தில் குறைவு ஏற்பட்டால் முன் ஏலதாரரிடம் அதனை ஈடு செய்யப்படும். கூடுதல் தொகைக்கு மறு ஏலம்/டெண்டர் சென்றால் மேற்படியாருக்கு இதில் எவ்வித உரிமையும் இல்லையென்பதுடன் முன் பொதுஏலத்தில்/டெண்டரில் கலந்து கொள்ள செலுத்தியுள்ள டெபாசிட் தொகையும் பறிமுதல் செய்யப்படும்.

32. பொது ஏலம் / டெண்டர் பொதுவாக உயர்ந்த தொகைக்கு உரிமம் உறுதி செய்ய பரிந்துரை செய்யப்படும்.

33. பொது ஏலம்/டெண்டர் எடுத்தவர்கள் உரிமத்தொகை முழுவதையும் உடனடியாக செலுத்தி ரசீது பெற்றுக் கொண்ட பின்னரே உரிமத்தினை ஆணையரின் அங்கீகாரத்திற்கு பரிந்துரைக்கப்படும். ஆணையரின் அங்கீகாரம் பெற்ற பின்னரே உரிமம் உறுதி செய்யப்படும்.

34. மேற்படி பொது ஏலம் / டெண்டரினை காரணம் காட்டாது திருக்கோயில் நிர்வாகத்தின் நன்மைக்கேற்ப ஏலம் நடைபெறும் நிலை உள்ளிட்ட எந்த நேரங்களிலும் புதிய நிபந்தனைகள் சேர்க்கவோ, நிறுத்தி வைக்கவோ, ரத்து செய்யவோ, மாற்றி வைக்கவோ அல்லது நிராகரிக்கவோ இணை ஆணையர்/ செயல் அலுவலருக்கு முழு அதிகாரம் உண்டு.

35. பொது ஏலம் / டெண்டர் உறுதியாகாத நபர்களுக்கு செலுத்தியுள்ள பொது ஏலம் / டெண்டர் டெபாசிட் தொகைகளை அன்றைய தினம் ஏலம் முடிந்த பிறகு அலுவலகத்தில் வைத்து மாலை சுமார் 5.00 மணிக்கு மேல் திரும்ப வழங்கப்படும்.

36. பொது ஏலம்/டெண்டர் ஆணையரால் அங்கீகரிக்கப்படாமல் ரத்து செய்யப்படும் நிலையில் டெபாசிட் தொகை உள்ளிட்ட ஏலத்தொகைகளுக்கு எவ்வித வட்டியும் வழங்கப்படமாட்டாது.

37 . இத்துறை ஆணையரால் உயர்ந்த பொது ஏலம் / டெண்ர் தொகை ஏற்று அங்கீகரிக்கப்பட்ட பின்னரே திருக்கோயிலிலிருந்து உரிமம் உறுதி செய்யப்பட்டு உத்திரவு வழங்கப்படும்.

38. பொது ஏலம் / டெண்டர் ஆணையரால் அங்கீகரிக்கப்பட்டவுடன் திருக்கோயிலிலிருந்து அனுப்பப்படும் அழைப்புக் கடிதத்தின்படி ரூ.20/- அரசு முத்திரைத்தாளில் திருக்கோயில் வாசகப்படி உரிய நிபந்தனைகளை ஏற்றுக் கொண்டு ஏலம் டெண்டர்தாரர் முச்சலிக்கா பத்திரம் எழுதி பதிவு செய்து கொடுக்க வேண்டும்.

39. முச்சலிக்கா பத்திரம் எழுதிக்கொடுக்கப்பட்ட பின்னரே பொது ஏலம்/டெண்டர் ஏற்று உறுதி செய்தும், உரிமத்தினை அனுபவிக்க அனுமதித்தும் திருக்கோயிலிருந்து தனியே அனுமதி உத்திரவு வழங்கப்படும்.

40. விற்பனை இனங்களுக்கு திருக்கோயிலால் நிர்ணயிக்கப்பட்ட கட்டணத்தைவிட அதிகமான தொகை வசூல் செய்யகூடாது.

<u>*பிரசாத விற்பனை விலை விபரம்*</u>

| வ. எ (1) | பிரசாதங்களின் விபரம் (2) | எடை கிராம் (3) | விலை ரூ.பை (5) |
|---|---|---|---|
| 1 | லட்டு | 50 | 10.00 |
| 2 | புட்டு | 50 | 10.00 |
| 3 | அதிரசம் | 50 | 10.00 |
| 4 | தேன்குழல் | 50 | 10.00 |
| 5 | மிளகுவடை | 50 | 10.00 |
| 6 | சர்க்கரை பொங்கல் | 100 | 10.00 |
| 7 | புளிச்சாதம் | 100 | 10.00 |
| 8 | வெண்பொங்கல் | 100 | 10.00 |
| 9 | தயிர்சாதம் | 100 | 10.00 |
| 10 | கற்கண்டு | 50 | 7.50 |
| 11 | நயம் விபூதி | 100 | 15.00 |
| 12 | பேரிட்சை | 100 | 10.00 |
| 13 | பேரிட்சை | 200 | 20.00 |
| 14 | லட்டு | 100 | 20.00 |
| 15 | கற்கண்டு | 100 | 15.00 |
| 16 | அதிரசம் -4 | 100 | 20.00 |
| 17 | புட்டமுது | 150 | 30.00 |
| 18 | மஞ்சள் குங்குமம் நயம் | 50 | 10.00 |
| 19 | மஞ்சள் குங்குமம் கயிறு அடங்கிய பாக்கெட் | 1 | 10.00 |
| 20 | சந்தனம் | 50 | 15.00 |

மேற்கண்ட பிரசாதங்களை தவிர வேறு பிரசாதம் எதுவும் விற்பனை செய்யக் கூடாது. உரிம காலத்தில் விலைவாசி உயர்வு காரணமாக பிரசாத விற்பனை விலை உயர்வு செய்ய நிர்வாகத்தை கோரக்கூடாது. திருக்கோயில் நிர்வாகம் நிபந்தனையில் நிர்ணயிக்கும் எடை மற்றும் விலையினை மாற்றாமல் பிரசாதங்களை தயாரித்து விற்பனை செய்ய வேண்டும். முதல் தரமான மூலப்பொருட்களைக் கொண்டு பிரசாதங்களை தயார் செய்யவேண்டும். இந்நிபந்தனையை மீறி செயல்பட்டது இணைஆணையரால் கண்டறிப்பட்டால் உரிமம் முன்னறிப்பின்றி ரத்து செய்யப்படும்.

41. உரிமதாரர் திருக்கோயிலின் புனிதம், தூய்மை மற்றும் நலனுக்கு எதிராகவும் சேவாத்திகள் நலனுக்கு இடையூறாகவும் செயல்படக்கூடாது.

42. உரிமதாரருக்கும் சேவார்த்திகளுக்குமிடையே சச்சரவுகள் ஏதேனும் ஏற்படும் நிலையில் இதுகுறித்து இணை ஆணையர் / செயல் அலுவலர் பிறப்பிக்கும் உத்திரவுகளுக்கு கட்டுப்பட்டு நடக்க வேண்டும்.

43. உரிமதாரருக்கு ராஜீகம் தெய்வீகம் இயற்கை சீற்றம் மற்றும் வேறு எவ்வித காரணங்களினாலும், இழப்புகள் ஏற்படும் நிலையில் இதற்கு திருக்கோயில் எவ்விதத்திலும் பொறுப்பாகாது. எனவே உரிய கட்டணத்தொகையில் எந்த பகுதியும் எச்சூழ்நிலையிலும் திருப்பி வழங்கப்படமாட்டாது.

44. உரிய இனங்களுக்கு வருமானவரி, விற்பனைவரி, சேவைவரி உள்ளிட்ட வேறு ஏதேனும் வரிகள் மற்றும் கட்டணங்கள் அரசுக்கு செலுத்த வேண்டியிருப்பின் உரிமதாரர் தன் சொந்த பொறுப்பிலேயே செலுத்திக்கொள்ளவேண்டும் இத்தொகைகளுக்கு திருக்கோயில் எவ்விதத்திலும் பொறுப்பேற்காது.

45. உரிமத்தை எக்காரணம் கொண்டும் வேறு எவருக்கும் எவ்விதத்திலும் மாற்றம் செய்யவும் தன்னிச்சையாக உரிமத்திலிருந்து விடுபடவும் அனுமதியில்லை.

46 . திருக்கோயிலின் அபிவிருத்தி, கட்டுமானம், மராமத்து, திருவிழா, பாலாலயம் சேவார்த்திகள் நலன் மற்றும் நிர்வாக நலன்கருதி, உரிமத்திற்கு தற்பொழுது ஒதுக்கீடு செய்யப்பட்ட இடத்திற்கு பதிலாக, வேறொரு மாற்று இடம் கொடுக்கவும் நிர்வாகத்திற்கு முழு உரிமையுண்டு. இதனை ஆட்சேபிக்க உரிமதாரருக்கு எவ்வித உரிமையும் இல்லை.

47. தீயணைப்புக் கருவி மற்றும் முதல் உதவி சிகிச்சை மருந்துகள் அனைத்தும் தயாரிப்பு மற்றும் விற்பனை நிலையங்களில் அமைந்திடவேண்டும்.

48. தயாரிப்பு மற்றும் விற்பனை பிரிவில் பணிபுரியும் நபர்கள் எவ்வித தொற்று நோய் பாதிப்பு இல்லாதவர்களாகவும் மற்றும் குற்ற பின்னணி இல்லதாவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

49. உணவுப் பாதுகாப்பு துறையில் உணவுப் பொருட்கள் விற்பனை செய்வதற்கான FSSAI உரிமம் பெற்று சான்றொப்பமிடப்பட்ட உரிமத்தின் நகலினை உரிமம் பெற்ற 30 நாட்களுக்குள் சமர்ப்பிக்க வேண்டும்.

50. 1428ம் பசலி தணிக்கை நடைபெற்ற பின்னரே பிரசாத விற்பனை குறித்து தணிக்கைத் தடை ஏதமில்லையென்று முடிவு செய்த பின்னரே ஒப்பந்ததாரரின் உரிமகால காப்புத் தொகை வட்டியின்றி திரும்ப வழங்கப்படும். திருக்கோயிலுக்கு ஏதேனும் நிதியிழப்பு ஏற்படின் உரிம கால காப்புத் தொகையில் பிடித்தம் செய்யப்பட்டு மீதித் தொகை இருப்பின் அத்தொகை மட்டுமே வட்டியின்றி திரும்ப வழங்கப்படும்.

51. பிரசாதங்களை தயார் செய்பவர்கள் மருத்துவ பரிசோதனை செய்து மருத்துவச் சான்று பெற வேண்டும்.

(ஒம்) சீ.செல்வராஜ்,
இணை ஆணையர் /செயல் அலுவலர்

/உண்மை நகல்/உத்திரவுப்படி/

23.5.18
கண்காணிப்பாளர்